


**01. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. உலக நாடுகளின் அமைதி, ஸ்திரதன்மை, வளத்திற்கு இந்திய - ரஷ்ய நாடுகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நம் நாட்டின் தொலைதொடர்பு துறை உலகளாவிய இணைப்புகளை முன்னெடுத்து செல்வதாக மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

3. ஜெர்மனியில் நடைபெறும் உயர்நிலை முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உரையாற்றுகிறார்.

4. தமிழக அரசு கலை கல்லூரிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக கவுரவ விரிவுரையாளர்கள் வரும் 8ஆம் தேதிக்குள் பொறுப்பேற்க மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் அறிவுறுத்தினார்.

5. ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா - கஸகஸ்தானை இன்று இரவு எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

**********

### பிரதமர்

இந்திய - ரஷ்ய நாடுகள் இடையேயான நெருங்கிய ஒத்துழைப்பு, உலக நாடுகளின் அமைதி, ஸ்திரதன்மை, வளத்திற்கு இன்றியமையாதது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சீனாவின் டியான்ஜின் நகரில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் இதனை தெரிவித்த பிரதமர் கடினமான தருணங்களிலும் இரு நாடுகளும் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்து நின்றதாக எடுத்துரைத்தார்.

உக்ரைன் நாட்டின் நெருக்கடிகள் குறித்து புதுதில்லியும் - மாஸ்கோவும் தொடர்ந்து விவாதித்ததாக எடுத்துரைத்த பிரதமர் அண்மையில் அமைதி திரும்ப ரஷ்யா மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் வரவேற்பதாக குறிப்பிட்டார்.

முன்னதாக ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் தீவிரவாதத்தில் இருவேறு நிலைப்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

கடந்த 40 ஆண்டுகளாக தீவிரவாத சவால்களை இந்தியா எதிர்கொண்டு வருவதாக கூறிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியா ஆக்கப்பூர்வமாக பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

பாதுகாப்பு, இணைப்புகள், வாய்ப்புகள், ஆகிய மூன்றும் ஷாங்காய் அமைப்பின் முக்கிய தூண்களாக திகழ்கிறது என்றார்.

ரஷ்யா அதிபர் புட்டினுடனான பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் பிரதமர் தமது சீன பயணத்தை முடித்துக்கொண்டு புதுதில்லி புறப்பட்டார்.

**********

**பிரகடணம்**

முன்னதாக டியான்ஜினில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகள் வெளியிட்டுள்ள பிரகடணத்தில் தீவிரவாதத்திற்கு எதிரான ஒருங்கிணைந்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி ஏற்கப்பட்டது.

பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் படைப்பாற்றல் திறனில் இந்தியாவின் பங்களிப்பிற்கு இதில் அங்கீகாரம் அளிக்கப்பட்டதோடு பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாத சவால்களை உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் எதிர்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டதோடு எல்லை தாண்டிய தீவிரவாத சவால்களை எதிர்கொள்ள சர்வதேச நாடுகளிடம் வலியுறுத்தப்பட்டது.

இந்தியாவின் தொலைநோக்கு பார்வையான ஒரே பூமி ஒரே குடும்பம் ஒரே எதிர்காலம் என்ற கருப்பொருளுக்கு டியான்ஜின் பிரகடணம் ஆதரவு தெரிவித்துள்ளது.

**********

**குடியரசுதலைவர்**

குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு அரசு முறை பயணமாக நாளை தமிழகம் வருகிறார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெறும் சிட்டி யூனியன் வங்கியின் 120ஆவது நிறுவன தின விழாவில் அவர் பங்கேற்கிறார்.

நாளை மறுநாள் திருச்சி வரும் குடியரசு தலைவர், திருவாரூர் மத்திய பல்கலைகழகத்தின் 10ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார்.

தொடர்ந்து திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாதர் சுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் மேற்கொள்கிறார்.

குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி சென்னை விமான நிலையம் மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

திருச்சி திருவாரூர் மாவட்டங்களில் பாதுகாப்பு காரணங்களை கருதி நாளை தொடங்கி இரண்டு நாட்கள் ட்ரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**********

**ஜோதிர் ஆதித்ய சிந்தியா**

நம் நாட்டின் தொலைதொடர்பு துறை உலகளாவிய இணைப்பை முன்னெடுத்து செல்வதாக மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் IMC 25 செயலியை இன்று அறிமுகம் செய்துவைத்து பேசிய அவர், படைப்பாற்றல் திறனுடன் கூடிய தொழிற்சாலைகளை இணைக்கவும், கொள்கைகளை முன்னெடுத்து செல்லவும், இந்த செயலி ஒரு முக்கிய தளமாக திகழ்வதோடு, எதிர்காலத்திற்கான இணைப்பை வலுப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

புதுதில்லியில் வரும் 8ஆம் தேதி தொடங்க உள்ள, 5 நாட்கள், தொலை தொடர்பு கண்காட்சியில், விவசாயிகள், பள்ளி குழந்தைகள், சிறு குறு நடுத்தர தொழில் முனைவோரின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான விவாதங்களும், ஆலோசனைகளும் இடம்பெறும் என்று குறிப்பிட்டார்.

5ஜி, 6ஜி அலைக்கற்றை, செயற்கை நுண்ணறிவு, மின்னணு உற்பத்தி, பசுமை தொழில்நுட்பங்களுடன் மின்னணு சவால்களை எதிர்கொண்டு, புதிய வாய்ப்புகளை கண்டறிவதற்கான வழிவகைகள் இக்கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

**********

**கிரண் ரிஜிஜு**

நாட்டின் உள்நாட்டு வளர்ச்சி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7.8 சதவிகிதமாக உயர்ந்திருப்பது பிரதமர் திரு.நரேந்திரமோடியின் பொருளாதார நிபுணத்துவத்திற்கு சான்றாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் மற்றும் உள்நாட்டு பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் நம் நாட்டை சுய சார்பு பாரதமாக முன்னெடுத்து செல்ல முடியும் என்றார்.

**********

**முதலமைச்சர்**

ஜெர்மனி நாட்டில் நடைபெறும் உயர்நிலை முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் முக்கிய முதலீட்டு அறிவிப்புகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

**********

**கோவி செழியன்**

தமிழ்நாட்டில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் தற்காலிக அடிப்படையில் 560 கவுரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாக, மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் **திரு.கோவி செழியன்** தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏழை எளிய மாணாக்கர் உயர்கல்வி பெறவேண்டும் என்ற நோக்கில் அரசு கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும், புதிதாக 15 அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்மூலம், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூடுதல் மாணவர் சேர்க்கை, பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

கல்லூரிகளில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட கவுரவ விரிவுரையாளர்கள், வரும் 8-ம் தேதிக்குள் உரிய கல்லூரிகளில் பணியில் இணைய வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

**********

**பூலித்தேவன்**

விடுதலை போராட்ட வீரர் பூலித்தேவனின் 310-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

**தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி வெளியிட்டுள்ள** செய்தியில் நாட்டின் விடுதலைக்கான ஆரம்பகால போராட்டங்களை துணிச்சலுடன் மேற்கொண்ட பூலித்தேவனுக்கு மரியாதை செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.

**முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தமது** சமூகவலைதள பதிவில் நாட்டின் விடுதலை போராட்டத்திற்கு தொடக்க உரை எழுதிய பூலித்தேவன் புகழை போற்றுவதாக கூறியுள்ளார்..

**ஆங்கிலேயரின் வரி வசூலுக்கு எதிராக வீரத்துடன்** குரல் எழுப்பிய ஒப்பற்ற வீரரான பூலித்தேவனின் நினைவை போற்றுவோம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

**பூலித்தேவனின் சொந்தஊரான தென்காசி** மாவட்டம் நெற்கட்டும்செவலில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் அவரது சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாநில அமைச்சர்கள் திரு. K.K.S.S.R ராமசந்திரன் திரு.தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**********

**செல்வபெருந்தகை**

I.N.D.I கூட்டணி வலுவாக உள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு.செல்வபெருந்தகை தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல்லை பாளையங்கோட்டையில் வரும் 7-ம் தேதி நடைபெற உள்ள காங்கிரஸ் கட்சி மாநாடு ஒரு திருப்புமுனையாக அமையும் என்று கூறினார்.

புதுதில்லியிலிருந்து மேலிடத்தலைவர்கள் இதில் பங்கேற்க இருப்பதாக குறிப்பிட்டார்.

முன்னதாக நெல்லை மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் அமைந்துள்ள பூலித்தேவனின் திருவுருவ படத்திற்கு அவர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**********

**சுங்ககட்டணம்**

தமிழக தேசிய நெடுஞ்சாலைகளில் திருச்சி, மதுரை, சேலம், திண்டுக்கல், தூத்துக்குடி, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 38 சுங்கச்சாவடிகளில் சுங்க கட்டண உயர்வு நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது.

இதன்படி நான்கு சக்கர வாகனங்களுக்கு 5 ரூபாய் கட்டண உயர்வு நடைமுறைக்கு வந்துள்ளது.

இருமுறை பயணத்திற்கு 10 ரூபாய் அளவிற்கு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

**********

**அணுமின் நிலையம்**

கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் 2ஆம் அலகின் மின் உற்பத்தி பணிகள், தொழில்நுட்ப காரணங்களால் இன்றுமுதல் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இதுகுறித்து எமது செங்கல்பட்டு செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**கொடைக்கானல்**

கொடைக்கானலில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு இன்றுமுதல் ஒரே இடத்தில் கட்டணம் வசூலிக்கப்படும் என வனத்துறை அறிவித்துள்ளது.

**********

**இருவரி**

**ராணிப்பேட்டை முப்பதுவெட்டி பூங்கோடு** கிராமத்தில் பாலாற்றங்கரையோரத்தில் குப்பைகளை அகற்றும் பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் சந்திரகலா தலைமையில் இன்று நடைபெற்றன.

**பெரம்பலூர் சமூகநீதி மாணவர் விடுதி மற்றும்** பள்ளி மாணவியர் விடுதி ஆகிய இடங்களில் ஆட்சித்தலைவர் திருமதி **மிருணாளினி** இன்றுகாலை ஆய்வு மேற்கொண்டார்.

**சிவகங்கை மாவட்டத்தில் ரோகு மற்றும் மிர்கால்** மீன் விரலிகள் கையிருப்பில் உள்ளதால் மீன்வளர்ப்போர் இதனை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி கேட்டுக்கொண்டார்.

**********

**மேட்டூர்**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 31 ஆயிரத்து 854 கன அடியாக அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 32 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**********

**ஹாக்கி**

பீகார் ராஜ்கிரில் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று கஸகஸ்தானை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா ஜப்பானை 3-2 என்ற கோல் கணக்கில் வென்று சூப்பர் 4 சுற்றுக்கு தகுதிபெற்றது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**